# முதல் பருவத்தேர்வு – 2023

# தொகுத்தறி மதிப்பீடு – சமூக அறிவியல்

**வகுப்பு – 6** **மதிப்பெண்கள் : 60**

**கால அளவு : 2 மணி நேரம்**

**I. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** **4 × 1 = 4**

1. தான்சானியா ________ கண்டத்தில் உள்ளது.
   அ. ஆசியா ஆ. ஆப்பிரிக்கா
   இ. அமெரிக்கா ஈ. ஐரோப்பா
2. மனிதன் தன் காலடியைப் பதித்துள்ள ஒரே விண்பொருள் எது?
   அ. செவ்வாய் ஆ. சந்திரன்
   இ. புதன் ஈ. வெள்ளி
3. எழுத்துப் பொறிப்புகள் பற்றியப் படிப்பு ________.
   அ. நாணயவியல் ஆ. மானுடவியல்
   இ. கல்வெட்டியல் ஈ. தொல்லியல்
4. இந்தியா ஒரு ________ என்று அழைக்கப்படுகிறது.
   அ. கண்டம் ஆ. துணைக்கண்டம்
   இ. தீவு ஈ. இவற்றில் ஏதுமில்லை

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **4 × 1 = 4**

5. ________ வங்காள விரிகுடாவையும், பாக் வளைகுடாவையும் இணைக்கிறது.
6. சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் ________.
7. கோயில்களின் நகரம் என அழைக்கப்படுவது ________.
8. உலகின் மிகப்பெரிய கண்டம்________.

**III. பொருத்துக.** **4 × 1 = 4**

| | | |
|---|---|---|
| 9. அசோகர் | – | செவ்வாய் |
| 10. செந்நிறக் கோள் | – | சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் |
| 11. வேற்றுமையில் ஒற்றுமை | – | மிகவும் புகழ்பெற்ற அரசர் |
| 12. பிரிவு 14 | – | இந்தியா |

**IV. சரியா/ தவறா?** **4 × 1 = 4**

13. போதிதர்மர் காஞ்சிபுரத்தைச் சார்ந்தவர்
14. பாங்க்ரா' என்பது குஜராத் மாநிலத்தின் செவ்வியல் நடனம் ஆகும்.
15. இந்தியப் பெருங்கடல் ஒரு நாட்டின் பெயரைக் கொண்டுள்ளது.
16. மனிதர்களின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு சக்கரம் ஆகும்.

**V. ஓரிரு வார்த்தையில் விடையளி.** **3 × 1 = 3**

17. ஒரு வினாடிக்கு ஒலியின் வேகம் என்ன?
18. தொடக்க கால மனிதர்கள் எதை அணிந்தார்கள்?
19. இளவழகி சிறந்து விளங்கிய விளையாட்டு எது?

**VI. எவையேனும் 8 வினாக்களுக்கு குறுகிய விடையளிக்கவும். 8 × 2 = 16**

20. தொல் கைவினைப் பொருள்கள் ஏதேனும் இரண்டினைக் கூறுக.

21. பரிணாமம் என்றால் என்ன?

22. சிந்துவெளி நாகரீகத்தின் கூறுகளில் உன்னைக் கவர்ந்தது எது? ஏன்?

23. சிந்துவெளி நாகரீகத்தின் பொதுவான உண்மைகள் இரண்டு கூறு.

24. உட்புறக் கோள்களைப் பட்டியலிடுக.

25. பரப்பளவின் அடிப்படையில் கண்டங்களின் பெயர்களை வரிசைப்படுத்தி எழுதுக.

26. தமிழ்நாட்டில் காணப்படும் பீடபூமியின் பெயர்களை எழுதுக.

27. 'சூரிய அண்மை' என்றால் என்ன?

28. இந்தியாவில் கொண்டாடப்படும் முக்கிய விழாக்களின் பெயர்களை எழுதுக.

29. பன்முகத் தன்மையின் வகைகள் யாவை?

30. பாரபட்சம் என்றால் என்ன?

31. இந்திய அரசியலமைப்பின்படி சமத்துவத்தை பற்றிக் கூறும் பிரிவுகளைப் பட்டியலிடுக.

**VII. எவையேனும் 4 வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும் 4 × 5 = 20**

32. எவ்வாறு விவசாயம் மற்றும் அதனை சார்ந்த தொழில்கள் உருவாயின?

33. காஞ்சிபுரம் கல்வியில் தலை சிறந்து விளங்கியது – என்ற கூற்றை நிரூபி.

34. உட்புற மற்றும் வெளிப்புறக் கோள்கள் வேறுபடுத்துக.

35. நிலத்தோற்றத்தின் வகைகளை விளக்கி எழுதுக.

36. இந்தியா "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற நாடாக இருப்பினும் நாம் அனைவரும் ஒன்றுபட்டுள்ளோம் – விளக்குக.

37. பாகுபாட்டிற்கான ஏதேனும் இரண்டு வகைகளை எழுதுக.

**VIII. 38. அ) இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும் 5 × 1 = 5**

1. மொகஞ்ச–தாரோ 2. ஹரப்பா 3. லோத்தல்

4. டெல்லி 5. சென்னை

**அல்லது**

**ஆ) உலக வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.**

1. ஆசியா
2. ஆஸ்திரேலியா
3. பசுபிக் பெருங்கடல்
4. அட்லாண்டிக் பெருங்கடல்
5. இமயமலைகள்


இந்திய வரைபடம்
68°
72°
76°
80°
84°
88°
92°
96°
36°
32°
28°
24°
23½°
20°
16°
12°
8°
N
Scale 1:16,500,000 1 cm = 165 kms

# உலக வரைபடம்

